## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.1.6.C

எண்கணிதச் செயல்பாடுகள் - முழுக்களில்
வகுத்தலின் சேர்ப்புப் பண்பு (Associative Property)

## எண்கணிதச் செயல்பாடுகள் - முழுக்களில் வகுத்தலின் சேர்ப்புப் பண்பு (Associative Property)

மூன்று முழுக்களின் வகுத்தலை அவற்றின் வரிசையை மாற்றி வகுத்தாலும் ஒரே விடை கிடைக்குமெனில் முழுக்கள் மீது வகுத்தல் செயலி சேர்ப்புப் பண்பை நிறைவு செய்வதாகக் கொள்ளலாம். கீழ்காணும் சமன்பாட்டையும் அதன்பின் வரும் உதாரணங்களையும் கவனியுங்கள்.

$$x \div (y \div z) = (x \div y) \div z$$

உதாரணம் :: மூன்று எண்களும் **மிகை** முழுக்கள்

$$18 \div (6 \div 3) = (18 \div 6) \div 3$$

$$18 \div 2 = 3 \div 3$$

$$9 = 1 \quad ✗$$

உதாரணம் :: மூன்று எண்களில் 2 எண்கள் **மிகை** முழுக்கள் 1 எண் **குறை** முழு எண்

$$24 \div (-6 \div 2) = (24 \div -6) \div 2$$

$$24 \div -3 = -4 \div 2$$

$$-8 = -2 \quad ✗$$

உதாரணம் :: மூன்று எண்களில் 1 எண் **மிகை** முழு எண் 2 எண்கள் **குறை** முழுக்கள்

$$-50 \div (25 \div -5) = (-50 \div 25) \div -5$$

$$-50 \div -5 = -2 \div -5$$

$$10 = 0.4 \quad ✗$$

உதாரணம் :: மூன்று எண்களும் **குறை** முழுக்கள்

$$-72 \div (-18 \div -2) = (-72 \div -18) \div -2$$

$$-72 \div 9 = 4 \div -2$$

$$-8 = -2 \quad ✗$$

மூன்று முழுக்களின் வகுத்தலை அவற்றின் வரிசையை மாற்றி வகுக்கும் பொழுது ஒரே விடை கிடைக்காததால் முழுக்கள் மீது வகுத்தல் செயலி **சேர்ப்புப் பண்பை** நிறைவு செய்யவில்லை எனத் தீர்மானிப்போமாக.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 25th May, 2022 :: 09:40 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**